Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 079 | வியாழக்கிழமை Thursday | 18.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தூத்துக்குடியில் விண்வெளி வாகனங்கள் பொது தொழில்நுட்ப வசதி மையம் அமைக்க ஒப்பந்தம்



தூத்துக்குடி மாவட்டம், அல்லிக்குளத்தில் விண்வெளி வாகனங்கள் பொது தொழில்நுட்ப வசதி மையம் அமைக்க தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) நிறுவனத்திற்கிடையே மேற்கொள்ளப்பட்ட சிறப்புமிக்க ஒப்பந்தத்தைதமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜயிடம் காண்பித்து வாழ்த்து.

தலைமை செயலகத்தில், தொழில் துறை அமைச்சர் ச. கீர்த்தனா , தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் தா. கார்த்திகேயன், ஆகியோர் சந்தித்து, கடந்த 11.6.2026 அன்று தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) இணைந்து தூத்துக்குடி மாவட்டம், அல்லிக்குளத்தில் உருவாக்கப்படவுள்ள விண்வெளி உற்பத்தி தொழிற்பூங்காவில் "விண்வெளி வாகனங்கள் பொது தொழில்நுட்ப வசதி மையம் (CTF)" அமைப்பதற்காககையெழுத்திடப்பட்ட சிறப்புமிக்கஒப்பந்தத்தை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் தா. கார்த்திகேயன், மற்றும் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) நிறுவனம்சார்பில்அதன் இணை செயலாளர் அனுபம் ஆனந்த், ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில், விண்வெளி துறை செயலாளர், விண்வெளி குழுத் தலைவர் மற்றும் இஸ்ரோ தலைவர் முனைவர் வி. நாராயணன்,இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) தலைவர் முனைவர் பவன் கோயங்கா ஆகியோர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் நடைபெற்ற 10-வது இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) தொழில் மாநாட்டின்போது நடைபெற்றது.

இது, மாநிலத்தில், விண்வெளி உற்பத்திக்கான உலகத்தர சூழலை உருவாக்கும்முயற்சியில் முக்கிய மைல்கல்லாக அமையும். இந்த ஒப்பந்தத்தின்படி, இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) நிறுவனம் 100 கோடி ரூபாய் மதிப்பிலான உபகரணங்களை வழங்கும். தமிழ்நாடு அரசு தேவைப்படும் நிலத்தை வழங்கி அதில் கட்டடங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் தேவையான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தும்.

இம்மையம், அதிர்வு, அதிர்ச்சி, வெப்ப-வெற்றிடம், மின் சார்ந்த குறுக்கீடு/ஒத்திசைவு, அழுத்தம் மற்றும் ஓட்டம், சோதனை, ஏவுகணை வாகன கூட்டமைப்பு,உதிரிப்பாகங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் ஹைட்ரோக்ளேவ் செயல்பாடுகள் ஆகியவற்றிற்கான அதிநவீன சோதனை மற்றும் தரநிலை உறுதிப்படுத்தும் வசதிகளை பயன்பாட்டிற்கு வழங்கும். இத்தகைய அதிக முதலீட்டுடன் அமைக்கப்படும் வசதிகள், தொழில்துறைக்கு விண்வெளி அமைப்புகள் மற்றும் உதிரிபாகங்கள் உருவாக்க, சோதிக்க,தரநிலை உறுதிப்படுத்த ஆகும் செலவையும் மற்றும் நேரத்தையும் குறைக்க உதவும்.

குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்படவுள்ள ஏவுகணைதளம் அருகில் உருவாக்கப்படவுள்ள இந்த தொழிற்பூங்கா, ஏவுகணை வாகன கூறுகள், செயற்கைக்கோள் அமைப்புகள், இயக்க அமைப்புகள், வான்வழி மின்னணு அமைப்புகள், ஒருங்கிணைந்தபொருள் கட்டமைப்புகள் மற்றும் பிற முக்கிய விண்வெளி உபகரணங்களை உற்பத்தி செய்யும் மையமாக விளங்கும். இந்த வசதி, இத்தொழிற்சூழலின் முதுகெலும்பாக விளங்கி,நாடுமுழுவதும் இந்த துறை சார்ந்த தொழில்களுக்கு உலகத்தர சேவைகளை பெற உதவும்.

இந்த கூட்டு முயற்சி, உலகத்தர தொழில் சூழல்களை உருவாக்கும் தமிழ்நாடு அரசின் நோக்கத்தையும், புதிய துறைகளுக்கான அதிநவீன அடிப்படை வசதிகள் மற்றும் மூலோபாய கூட்டாண்மைகளை (Strategic Partnerships) ஏற்படுத்தும்முயற்சியையும் உறுதி செய்கிறது. இவ்வசதி, தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி விண்வெளி உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையமாக நிலைநிறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, உலக விண்வெளி உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்கும் கனவிற்கு முக்கிய பங்களிப்பாக விளங்கும்.

# “நாட்டில் நடக்கும் அக்கிரமங்கள் மீது நடவடிக்கை எடுங்கள்” முதலமைச்சர் விஜய்க்கு தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை:

"நாட்டில் நடக்கும் அக்கிரமங்கள் எல்லாம் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் முதல்வராக இருப்பவர் அதையெல்லாம் படித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை - வானகரத்தில் இன்று நடைபெற்ற முன்னாள் அமைச்சர் ஆர்க்காடு நா.வீராசாமியின் பேரனும், திமுக எம்.பி கலாநிதி வீராசாமியின் மகனுமான சித்தார்த்-ஆஷ்ரயாஇணையரின் திருமணத்தை நடத்திவைத்து பேசிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், "1976-இல் நாங்கள் எல்லாம் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தபோது ஆர்க்காட்டார் எங்களோடு இருந்தார்கள். சிட்டிபாபு எந்த அளவிற்கு கொடுமைகளுக்கு எல்லாம் ஆளாக்கப்பட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியும். அவர் மறைவதற்கு என்ன காரணம் என்பதும் உங்களுக்குப் புரியும். அதைப்பற்றி எல்லாம் இந்த மணவிழா நிகழ்ச்சியில் நாம் பேச விரும்பவில்லை.

அப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் சென்னை சிறைச்சாலையில் நடைபெற்றது. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், நான் சிறையில் நிம்மதியாக தெம்போடு திராணியோடு இருந்தேன் என்று சொன்னால், அதற்கு ஆர்க்காட்டார் காரணமாக இருந்தார் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கும் என்னுடைய கையில் மிசா தழும்பு இருக்கிறது. அதேபோன்று ஆர்க்காட்டார் இன்றைக்கும் ஒருகாது கேட்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. சிறையில் பட்ட அந்தக் கொடுமையின் காரணத்தினால்தான் அந்த நிலைக்கு அவர் ஆளாக்கப்பட்டார். எனவேதான் "வைரம் பாய்ந்த ஒரு தொண்டன்" ஆர்க்காட்டார் என்று கருணாநிதி பலநேரங்களில் சொல்லியிருக்கிறார்.

ஒரு மாநிலக் கட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு தேர்தல் தோல்விக்கே இன்றைக்குப் பல கட்சிகள் காணாமல் போயிருக்கிறது. ஆனால் 75 ஆண்டு காலம் கொண்ட கொள்கைக்காக லட்சியத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் கட்சி; ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மக்களுக்காகப் பாடுபடும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இன்றைக்கு எத்தனையோ பேர் வந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கும் ஆட்சியைப்பற்றிசொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். சோசியல் மீடியா இன்றைக்கு எந்த அளவுக்கு பரவிக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். அந்த சோசியல் மீடியா ஒரு அளவுதான்; நாளடைவில் அதெல்லாம் மறைந்து போகத்தான் போகிறது.

இன்றைக்கு சோசியல் மீடியாவை பார்க்கிறபோது, 'கோட்' போட்டு வந்தார்; கையில் டிஃபன் கேரியர் எடுத்து வந்தார்; வாட்ச் கட்டி வந்தார்; செஸ் விளையாடினார்; இன்றைக்கு கோட்டு போடவில்லை; பட்டு சட்டை -வேஷ்டி-யில் வந்தார். இதெல்லாம் செய்திகளாக வந்து கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் மறைந்து, நாட்டில் நடக்கும் அக்கிரமங்கள் எல்லாம் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு தமிழ்நாட்டில் முதல்வராக இருப்பவரை பார்த்து நான் கேட்பதெல்லாம், தயவுசெய்து இன்றைக்கு உங்களைப் பற்றி, உங்கள் ஆட்சியை பற்றி வரும் செய்திகளைப் படியுங்கள். படித்து, அதில் இருக்கும் உண்மையைக் கண்டுபிடிங்கள். அதற்குரிய நடவடிக்கை எடுங்கள் என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள்" எனத் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# மதுரை, ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு; வானிலை ஆய்வு மையம் தகவல்



சுமார் 3.1 கிமீ உயரத்தில் வட தமிழக பகுதிகளிலிருந்து லட்சத்தீவு பகுதிகள் வரை ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது. சுமார் 1.5 கிமீ உயரம் வரை கிழக்கு உத்தரபிரதேசத்திலிருந்து, கிழக்கு மத்திய பிரதேசம், கிழக்கு விதர்பா மற்றும் தெலுங்கானா வழியாக தெற்கு கடலோர ஆந்திரப் பிரதேசம் வரை ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

19-06-2026: நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

20-06-2026 மற்றும் 21-06-2026: தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன்(மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

22-06-2026 மற்றும் 23-06-2026: தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டு க்கல், மதுரை, ஈரோடு, நாமக்கல்,கரூர்,திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில்ஒரிருஇடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன்(மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக் கூடும்

செய்திகள்


உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



# தென்காசி மாவட்டத்தில் தியாகி வாஞ்சிநாதனின் 115வது நினைவு நாள் அனுசரிப்பு

## மாவட்ட ஆட்சித் தலைவர் மரியாதை

தென்காசி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்தியாகிவாஞ்சிநாதனின் 115-ஆவதுநினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ் ஜீத் சிங் செங்கோட்டையில் அமைந்துள்ள வீர வாஞ்சிநாதன் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் செங்கோட்டை நகர்மன்ற தலைவர் ராமலட்சுமி, முன்னாள் நகர்மன்ற தலைவர்எஸ்.எம்.ரஹீம், செங்கோட்டை ஆணையாளர் லட்சுமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது, தியாகி வாஞ்சிநாதனின் சுதந்திரப் போராட்ட தியாகங்களையும், நாட்டிற்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க சேவையையும்நினைவுகூர்ந்து அனைவரும் மரியாதை செலுத்தினர். அவரது வீரத் தியாகம் இன்றைய தலைமுறையினருக்கு முன்மாதிரியாக விளங்குவதாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று (17.06.2026) நடைபெற்ற 1435ம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) ல் வருவாய் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பயனாளிக்கு "தாய்மொழி கன்னடம்" சான்றிதழ் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# தொளசம்பட்டி கழிப்பிடம் சுத்தம் செய்யக்கோரி பொதுமக்கள் கோரிக்கை

சேலம்மாவட்டம்ஓமலூர் அருகே உள்ள



தொளசம்பட்டி சந்தைப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள ஆண்கள் பொதுக்கழிப்பிடம் முறையாக பராமரிக்கப்படாததால் துர்நாற்றம் வீசுவதாகவும், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் என 200க்கும் மேற்பட்டவர்கள் தினமும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதாக கூறி அப்பகுதி பொதுமக்கள் இந்த கழிப்பிடத்தை சீர் செய்து தர வேண்டும் என்று அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்துள்ளனர். இது சம்பந்தமாக அன்றிலிருந்து இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும்,சுகாதாரக் கேடு ஏற்படும் அபாயம் உள்ளதால் உடனடியாக பொதுக்கழிப்பிடத்தை சுத்தம் செய்து, நிரந்தர பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தொளசம்பட்டி ஊர் பொதுமக்கள் மற்றும் தாரமங்கலம் எம் ஜி ஆர் காலனி சமூக ஆர்வலர் K.சசிகுமார் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி கடந்த நிதியாண்டில் ரூ.1.78 லட்சம் கோடி; புதிய சாதனை



கடந்த 2025-2026ம் நிதியாண்டில் இந்தியாவின் வருடாந்திர பாதுகாப்பு உற்பத்தி, ரூ.1.78 லட்சம் கோடியாக உயர்ந்து, வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டின் உற்பத்தியான ரூ.1.54 லட்சம் கோடியை விட 15.6 சதவீதம் அதிகமாகும். 2020-2021ல் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி ரூ.84,643 கோடியாக இருந்தது.

அதை ஒப்பிடும்போது தற்போதைய பாதுகாப்பு உற்பத்தி 110 சதவீதம் அதிகரித்துள்ளது. மத்திய அரசின் தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ், உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதே இந்த வளர்ச்சிக்கு காரணம் என்று கூறப்படுகிறது. மொத்த பாதுகாப்பு உற்பத்தியில் பொதுத்துறை நிறுவனங்கள் சுமார் 76 சதவீத பங்களிப்பை வழங்கிய நிலையில், தனியார் துறை 24 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளது. இது 2024-25 நிதியாண்டில் 22 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# SDPI கட்சியின் துவக்க தினத்தை மக்கள் நலதிட்டங்களுடன், எழுச்சியோடு கொண்டாட மாவட்ட செயற்குழுவில் தீர்மானம்



SDPI கட்சியின் தென்காசி மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர் திவான் ஒலி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொதுச்செயலாளர் செய்யதுமஹ்மூத் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் அப்துல்பாசித், மாவட்ட செயற்குழு உறுப்பினர், மகளிரணி மாவட்ட தலைவர் பரக்கத்நிஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தென்காசி தொகுதி தலைவர் பீர்முகம்மது, தொகுதி செயலாளர் கோல்டன் பாதுஷா, தொகுதி அமைப்பு செயலாளர் அப்துல் காதர் @அபு, கடையநல்லூர் தொகுதி செயலாளர் ஷாஜித்அலி,தொகுதி அமைப்பு செயலாளர் ஷாகுல் ஹமீது @கனி, ஆலங்குளம்தொகுதிசெயலாளர் அப்துல்அஜீஸ்,தென்காசி நகர தலைவர்செய்யது அலி பாதுஷா, நகர செயலாளர் ஷேக்மைதீன்,செங்கோட்டை நகரசெயலாளர் முகம்மது அலி, பண்பொழி நகரதலைவர் மைதீன், புதூர் பேரூர் தலைவர் துரையப்பா, வடகரை நகர தலைவர் முகம்மது இஸ்மாயில்,சுரண்டை நகர தலைவர் அப்பாஸ், நகர செயலாளர் அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது நகரங்களுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற மக்கள் பணிகள் மற்றும் சட்டமன்றதேர்தல்பணிகள் குறித்தும் கருத்துக்களைபகிர்ந்துகொண்டனர். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கட்சியின் மாநில பொதுச்செயலாளர் நிஜாம்முகைதீன் அவர்கள் கலந்து கொண்டு , சட்டமன்ற தேர்தல் சம்மந்தமான கருத்துக்களை நிர்வாகிகளிடம் பகிர்ந்து கொண்டு , மேலும் உத்வேகத்தோடு மக்கள் பணிகள் செய்யவேண்டியதன் அவசியம் குறித்தும் நிர்வாகிகளிடம் கலந்துரையாடினார்.மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் ஷேக்முகம்மது ஒலி நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் -1

Sdpi கட்சி துவங்கி 17 ஆண்டுகளை கடந்து, எதிர்வருகின்ற ஜூன் -21 ஆம் தேதி 18 ஆம் ஆண்டில்அடியெடுத்துவைக்கின்றது. கட்சியின் துவக்கதினத்தைமாவட்டம் முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், மக்கள்நலதிட்டங்கள் மற்றும் விளையாட்டுப்போட்டிகள், மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குவது என எழுச்சியோடு கொண்டாட வேண்டும்.

தீர்மானம் -2

தென்காசி மாவட்டத்தில் கனிமவள கொள்ளை தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. அமைச்சர் பெருமக்கள் ஆய்வு , விதிகளை மீறும் குவாரிகள் மீது நடவடிக்கை என அதிரடியாக அரசு இயங்குவது போல் காட்டிக்கொண்டாலும் , அனுதினமும் ஆயிரக்கணக்கான மெகாசைஸ் லாரிகளில் தொடர்ந்து கனிமவளங்கள் கேராளாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் போக்குவரத்து பாதிப்பு,சாலைகள் சேதமடைவது, விபத்துகள் என கனிமவள வாகனங்களால் பொதுமக்கள் , வாகனஓட்டிகள் மிகவும் பாத்துக்கப்படுகின்றனர். இதனை SDPI கட்சி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக நலஅமைப்புகள் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றாலும் பெரும்பாலும் நடவடிக்கை எடுப்பதில்லை. தற்போது குற்றால சீசன் துவங்கியுள்ள நிலையில் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குற்றாலத்திற்கு வருகை தரும் நிலையில் கட்டுப்பாடற்ற கனிமவள வாகனங்களின் அணிவகுப்பின் காரணமாக போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே மாவட்ட நிர்வாகம் கனிமவள கொள்ளையை தடுத்துநிறுத்த தொடர்ச்சியான கண்காணிப்பு குழுக்களை அமைத்து விதிமீறும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் குற்றால சீசனை முன்னிட்டு கனிமவள வாகனங்களின் போக்குவரத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீர்மானம் -3

தென்காசி மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்கள் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக பயிர்கடன் தள்ளுபடி , NCCF மூலம் கொள்முதல் செய்யப்பட்ட விளைபொருட்களுக்கான நிலுவைத் தொகையை வழங்குதல், உரவிலைகுறைப்பு,வனவிலங்கு சேதங்களை கட்டுப்படுத்துதல், இரட்டைகுளம் கால்வாய், செண்பகவல்லி அனைக்கட்டு திட்டத்தை செயல்படுத்துதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருவதோடு, தொடர்போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டங்கள் நடைபெற்று வந்தாலும் அவர்களின் குறைகள் பெரும்பாலும் தீர்க்கபப்படாமலே உள்ளது. ஆகவே விவாசாயத்தையே பிரதான தொழிலாக கொண்டுள்ள தென்காசி மாவட்டத்தின் விவசாயிகள் குறைதீர்க்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீர்மானம் - 4

தென்காசி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசின் உலமாக்களுக்கு மானியவிலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. இந்திட்டத்தில் விண்ணப்பிக்க பல்வேறு காட்டுப்படுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒரு பள்ளிவாசலில் இமாம், முஅத்தின் என இருவகையானபணியாளர்கள் இருக்கும்போது ஒருவருக்கு மட்டுமே விண்ணப்பங்கள் பெறப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. பொதுவாகவே பள்ளிவாசல் மற்றும் மதரசாக்களில் பணிபுரிபவர்கள் குறைவான சம்பளத்தில், ஏழ்மை நிலையிலேயே தங்கள் வாழ்வாதாரத்தை கழித்துவருகின்றனர்.அரசின்திட்டங்கள் மற்றும் மானியங்களை பெறுவதற்கு முழுமையான தகுதியுடைய இவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவது ஏற்புடையது அல்ல. ஆகவே மாவட்ட நிர்வாகம் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் மானியவிலையில் இருசக்கர வாகனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தென்காசி மாவட்ட உலமாக்கள் திருநெல்வேலியில் அமைந்துள்ள வக்ஃபு வாரிய அலுவலகத்தில் சென்று ஒப்புதல் வாங்கி மீண்டும் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை வழங்குகின்றனர்.இதனால் அலைச்சல் ஏற்படுவதோடு, குறித்த நேரத்தில் பணிக்கு செல்வதிலும் சிரமம் ஏற்படுகின்றது. ஆகவே அவர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெறுவதற்கு சிறுபான்மை நலத்துறை மூலம்,சிறப்புமுகாமகள் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தேனி அருகே கிராமத்தில் குடிநீர், பொது கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாததால் அவதிப்படும் கிராம மக்கள்

தேனி அருகே வயல்பட்டி கிராமத்தில் சுமார் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர் இந்த கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

கிராமத்தில் சாக்கடை கழிவுகள் தேங்கி நின்று அதை அகற்றுவதற்கு எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் சுகாதாரம் சீர்கேடு ஏற்படுவதாகவும் இதனால் நோய் தொற்று பாதிப்பும் ஏற்பட்டு வருவதாக கூறுகின்றனர்

மேலும் கிராம மக்களுக்காக கட்டப்பட்ட பொது கழிப்பறைமுறையான பராமரிப்பு இன்றி சேதம் ஏற்பட்டுள்ளதால் அதை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது இதனால் கழிப்பறை செல்வதற்கு கூட பொதுமக்கள் கடும் சிரமத்துடன் செல்லும் நிலை ஏற்படுகிறது

இதேபோல் கிராமத்தில் வாரத்திற்கு ஒரு முறை மட்டும் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருவதாகவும் அதையும் முறையாக ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர் மேலும் தெருவிளக்குகள் சரிவர எரியாததால் இரவில் பொதுமக்கள் நடமாட



முடியாத நிலை ஏற்படுவதாக கூறுகின்றனர்

இது குறித்து புகார் தெரிவித்தும் உரிய நடவடிக்கைஎடுக்கவில்லை என கூறும் அப்பகுதி மக்கள் தங்கள் பகுதியில் உள்ள அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

# 'வீ தி லீடர்ஸ்'ல் 50 லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்த பின்னரே அடுத்த நகர்வு; அண்ணாமலை தகவல்

சென்னை:'வீதி லீடர்ஸ்' இணையப்பக்கம்வெளிப்படைத் தன்மையுடன் இருக்கும். அதில், 50 லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்தவுடன் மக்களிடம் நாம் அரசியலுக்கு வர வேண்டுமா என கருத்து கேட்போம். அதுவரை இலக்குடன் செயல்படுவோம் என அந்த இயக்கத்தின் நிறுவனர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

'வீதி லீடர்ஸ்' இயக்கத்தின் நிறுவனர் அண்ணாமலை யூடியில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதில் அவர் கூறியிருப்பதாவது: நாம் அனைவரும் ஒரு குடும்பமாக 'வீ தி லீடர்ஸில்' இணைந்திருக்கிறோம். ஒரு மாற்றத்தை நோக்கி செல்கின்றோம்; அந்த மாற்றத்தை நாம் அடிப்படையிலிருந்து ஆரம்பித்திருக்கிறோம்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து நாம் பேச வேண்டும். மக்களின்அன்றாடவாழ்க்கை, விவசாயம், உணவுப் பொருட்கள், சுகாதாரமற்ற காற்றுஆகியவைகுறித்துப் பேச வேண்டும். எந்தக் கட்சிகளும் இது பற்றி பேசுவது கிடையாது.



'வீ தி லீடர்ஸ்' இயக்கத்தைசரியானபாதையில் கொண்டு செல்வேன்; இந்த இயக்கம் கட்சியாக மாறினால் இதன் தன்மை வேறு மாதிரி இருக்கும். முன்பிருந்த கட்சியிலோ, இப்போதோ யாருக்கும் போன் செய்து இயக்கத்தில் இணைய அழைக்கவில்லை. இயக்கத்தில் தற்போது வரை சுமார் 18 லட்சம் பேர் எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் இணைந்துள்ளனர். இயக்கத்தில் இணைந்த சகோதர,சகோதரிகளுக்கு நன்றி.

மக்களாகவந்துஇணையும்போது அனைவரையும் வரவேற்பேன். ஓடிபி அடிப்படையில் உறுப்பினர்களை சேர்க்கும் ஒரே இயக்கம் 'வீ தி லீடர்ஸ்'. ஜூலை மாதம் முதல் அரசியல் நடவடிக்கைகள் தொடங்கும். எனது இயக்கத்திற்கு தாமாக இளைஞர்கள் வரவேண்டும் என எதிர்பார்த்தேன். நமக்கு பாஸிடிவ் அரசியல் தான் தேவை.

வீ தி லீடர்ஸ் வெப்சைட் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கும். அதில் 50 லட்சம் உறுப்பினர்களை இணைந்தவுடன் மக்களிடம் நாம் அரசியலுக்கு வர வேண்டுமா என கருத்து கேட்போம்.அதுவரைநாம் இலக்குடன் செயல்படுவோம்.

70 ஆயிரம் பேர் நாங்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவோம் எனத் தெரிவித்துள்ளனர் அவர்களை நாம் எப்படி ஒருங்கிணைப்பது, அதில் பத்தாயிரம் பேர் கிட்டத்தட்ட தேர்தலில் போட்டியிட்டவர்கள். இதுகுறித்து நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

பஞ்சாயத்துகள் எப்படி செயல்படுகிறது. கிராமங்கள், நகரங்கள் குறித்த பல்வேறு அடிப்படை விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு இது சம்பந்தமாக எதுவுமே தெரியாமல், அவர்களை எப்படித் தேர்தலில் நிற்க வைக்க முடியும். அவர்கள் எப்படி மக்களுக்கு உதவி செய்வார்கள். நான் இந்த ரசிகர் மன்றத்தில் இருந்தேன்; இன்று காலையில் சீட் கொடுத்தார்கள் எம்எல்ஏ ஆகிவிட்டேன் எம்பி ஆகிவிட்டேன் என்ற நிலை இருக்கிறது. நான் யாரையும் இதன் மூலம் குறை சொல்ல விரும்பவில்லை. வீதி லீடர்ஸ் மூலம் உறுப்பினர்களுக்கு முறையான வழிகாட்டுதல் கொடுக்கப்படும்.

ஒருவரே 50 வருடம் எம்பி, எம்எல்ஏவாக இருப்பது ஆகியவைகளை உடைக்க வேண்டும். பத்து வருடத்தில் உலகமே மாறிவிடுகிறது. இது குறித்து நாம் பின்னர் விரிவாகப் பேசுவோம். நமது அரசியல் நாளைய மாற்றத்துக்கான அரசியல்.

இயற்கை விவசாயம், போதைப் பொருட்களுக்கு எதிரான நமது நிலைப்பாடு,சாலைவிபத்துக்களை சரி செய்ய வேண்டும். அறம் சார்ந்த அரசியல் மற்றும் வாழ்க்கை முறையைக் கொண்டு வருவோம்; அது பெரிய மாற்றத்தை கொண்டு வரும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



20 ஆண்டுகள் ஒரே பதவியில் சிறப்பாக பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு சிறப்புநிலை வழங்கி ஊதிய உயர்வு வழங்குவது வழக்கம் அந்த வகையில் திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்துவகை ஆசிரியர்கள் 31 பேருக்கு சிறப்புநிலை வழங்குவதற்கான ஜமாபந்தி திருவள்ளூர் முதலாம் கல்வி அலுவலக கூட்டரங்கத்தில் நடைபெற்றது , முதுகலை ஆசிரியர்கள் 2 பேருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் 23 பேருக்கும் உடற்கல்வி, ஓவியம் தையல் உள்ளிட்ட 6 சிறப்பசிகளுக்கு சிறப்புநிலை பெறுவதற்கான ஆணை மற்றும் இரண்டு ஊதிய உயர்வு பெறுவதற்கான ஆணையை திருவள்ளூர் முதன்மைக் கல்வி அலுவலர் கோ.சுப்பாராவ் வழங்கினார் நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர் பி.அமுதா தலைமை தாங்கினார் ஒருங்கிணைந்த பள்ளிகள் கூடுதல் அலுவலர் வா.பாலமுருகன், மாவட்டமுதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் தண்டபாணி , மாவட்டக்கல்வி அலுவலர் தொடக்க மற்றும் இடைநிலை நேர்முக உதவியாளர்கள் பொற்செழியன், ரமேஷ்பாபு , அலுவலக கண்காணிப்பாளர்கள் ராஜமாணிக்கம், முரளி, ஜீவன், அருள், பாண்டுரங்கன், உதவியாளர்கள் , ரவி , லட்சுமிநாராயணன், முத்துலட்சுமி,



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.06.2026) தாளவாடி, ஏரகனஹள்ளியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மானியத்துடன் கூடிய விவசாய நிரந்தர காய்கறி பந்தலினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று (17.06.2026) நடைபெற்ற 1435ம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) ல் வருவாய் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மரக்கன்றினை நட்டு வைத்தார்.

## பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு: குற்றவாளியை கைது செய்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை



திருநெல்வேலி மாநகரம், வண்ணாரப்பேட்டையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் உறவினருக்கு உதவியாக பெண் ஒருவர் இருந்து வந்துள்ளார். அந்த பெண்ணிடம் ஒரு நபர் தவறான முறையில் நடந்து கொள்ள முயன்று, பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக நெல்லை மாநகர சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படையினர் தென்காசி மாவட்டம் ஆண்டிப்பட்டியை சேர்ந்த பாஸ்கர் (வயது 49) என்பவரை உடனடியாக கைது செய்து, பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். அதைத் தொடர்ந்து பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்து, போலீசார் குற்றவாளியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.



சேலம்மாவட்டத்தின்புதியகாவல்கண்காணிப்பாளராக (SP) எஸ்.குதாலிங்கம் (IPS) 17.06.2026 பொறுப்பேற்றுக் கொண்டார். இதற்கு முன் சென்னை தி.நகர் துணை ஆணையராக பணியாற்றிய இவர், ஜூன் 2026ல் நடந்த ஐ.பி.எஸ் அதிகாரிகள் இடமாற்றத்தின் போது சேலம் எஸ்.பியாக பொறுப்பேற்றுள்ளார்.

## ரியல் எஸ்டேட் என்ற பெயரில் 100க்கும் மேற்பட்ட நபர்களிடம் பல கோடி ரூபாய் மோசடி செய்த நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

### மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்ததுடன் பத்திரிக்கையாளர்களை சந்தித்து தெரிவித்தனர்



கோவை பெரியநாயக்கன்பாளையம் அடுத்த வீரபாண்டி பகுதியை சேர்ந்தவர் வசந்த் குமார். இவர் பாதிக்கபட்ட பொதுமக்களுடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். தொடர்ந்து இது குறித்து கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள பத்திரிகையாளர்கள் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினர். அப்பொழுது வசந்தகுமார் கூறியதாவது..ரியல்எஸ்டேட் துறையில் வீரபாண்டி பகுதியில், ஆர். எம் கார்டன்,என்றபெயரில்,முதலீடு செய்து அதிக லாபம் பெறுங்கள் என்று பொதுமக்களிடையே விளம்பரம் செய்து பல கோடி மோசடி செய்ததாக மணிகண்டன் என்பவர் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளதாகவும், 100க்கும் மேற்பட்ட பொதுமக்களை ஏமாற்றி பல கோடி மோசடி செய்துள்ளார். இது குறித்து பாதிக்கப்பட்ட பொதுமக்களும், இணைந்து, காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனுக்களாக வழங்க உள்ளதாகவும், மாபெரும் பண மோசடி குறித்து பாதிக்கப்பட்ட, எங்களுக்குநிதி கிடைக்க வேண்டியும், சட்டபூர்வமான நடவடிக்கையை அரசு எடுத்து எங்களுக்கு, பணத்தை இழந்த எங்களுக்கு பெற்று தர வேண்டும் என்று தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆனைமலை புலிகள் காப்பக விடுதிகளில் கேம்ப் ஃபயருக்கு ஐகோர்ட் தடை

மதுரை:

ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உள்ள தனியார் விடுதிகளில் கேம்ப் ஃபயர், இசை நிகழ்ச்சி நடத்த தடை விதித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு



உள்ளது.

கொடைக்கானலை சேர்ந்த பாலகிருஷ்ணன், செல்வ கணபதி உள்ளிட்ட 5 பேர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தூாக்கல் செய்த மனுவில்:

ஆனைமலை புலிகள் காப்பக இடையக பகுதி விரிவுப்படுத்தப்பட்டு கொடைக்கானல் மற்றும் திண்டுக்கல் வனப் பிரிவுகளின் சில பகுதிகளும் இணைக்கப்பட்டன.இந்த எல்லை பூண்டி கிராமத்தில் தொடங்கி மன்னவனூர், கூக்கால் ஆகிய கிராமங்கள் வழியாக ஆண்டிப்பட்டி வரை செல்கிறது.

தேசிய வனவிலங்கு வாரியத்தில் முன் அனுமதி இல்லாமல் இந்த பகுதியில் விடுதிகள், ஹோட்டல்கள், பூங்காக்கள் போன்றவை கட்டப்படக்கூடாது. ஆனால் கொடைக்கானலில் முறையான அனுமதி இல்லாமல் அங்கீகாரம் அற்ற வணிக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

எனவே மன்னவனூர் கிராம ஆனைமலை புலிகள் காப்பகத்தின் இடையகப் பகுதியில் எவ்வித வணிக கட்டிடங்களுக்கும் அனுமதி வழங்க தடை விதிப்பதோடு, மன்னவனூர் கிராமத்தில்,சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வணிக கட்டிடங்களை அகற்றவும், அதன் இயல்பான நிலைக்கு மீட்டெடுக்கவும் உத்தரவிட வேண்டும்," என மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில், வணிக ரீதியான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால் ஒவ்வொரு நாளும் 'கேம்ப் பயர்' அமைக்கப்பட்டு இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்த கட்டுமானங்கள் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.


அவற்றை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பாக தமிழக வனத்துறை முதன்மைச் செயலர், ஆனைமலை புலிகள் காப்பகதலைமை வன பாதுகாவலர் பதில் மனு தாக்கல் செய்யவும், தனியார் விடுதிகளில் எவ்விதமான கேம்ப் ஃபயர் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தக்கூடாது என்றும் உத்தரவிட்டு, வழக்கை வனம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அமர்வுக்கு மாற்றி ஒத்திவைத்தனர்.

## விஜய், உதயநிதி, தமிழிசை வேட்புமனு சொத்து விவரங்கள் குறித்த வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி

சென்னை: தமிழக முதல்வர் விஜய், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் வேட்புமனுக்களில் சொத்து விவரங்களை மறைத்தது குறித்து வருமான வரித்துறை விசாரிக்கக் கோரிய வழக்குகளை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சென்னை பெரம்பூர் மற்றும்திருச்சிகிழக்கு தொகுதிகளில் போட்டியிட்ட முதல்வர் விஜய், இரு தொகுதிகளிலும் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளதாகவும், பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில், 115 கோடியே 13 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் சொத்து மதிப்பு எனக் குறிப்பிட்டிருந்த நிலையில், திருச்சி கிழக்கு தொகுதி வேட்புமனுவில், ரூ.220 கோடியே 15 லட்சத்து 62ஆயிரம்ரூபாய்எனக் குறிப்பிட்டுள்ளதால், அவரது சொத்து விவரங்கள் முழுமை யானவையா? உண்மையானவையா என விசாரிக்க, வருமான வரித்துறைக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உத்தரவிட வேண்டும்எனபெரம்பூர் தொகுதி வாக்காளரான, வியாசர்பாடியைச் சேர்ந்த விக்னேஷ் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்துள்ள வேட்பு மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்களுக்கும், கடந்த 2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின் போது தாக்கல் செய்த சொத்து விவரங்களுக்கும் முரண்பாடுகள் உள்ளதாக கூறி உதயநிதி ஸ்டாலின் போட்டியிடும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி வாக்காளரான குமாரவேல் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

மயிலாப்பூர் தொகுதி பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன், 2024-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட போது தாக்கல் செய்த வேட்புமனுவில் கூறியிருந்த சொத்து விவரங்களுக்கும், சட்டப்பேரவைத் தேர்தல் வேட்புமனுவில் தெரிவித்த சொத்து விவரங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளதாகக் கூறி, மயிலாப்பூர் தொகுதி வாக்காளர் கவுதம் சிவா வழக்கு தாக்கல் செய்திருந்தார்.



இந்த மூன்று வழக்குகளும், தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபால், முதல்வர் விஜய் முதலில் தாக்கல் செய்த வேட்புமனுவை திருத்தம் செய்து புதிய மனுவை ஏற்கெனவே தாக்கல் செய்துவிட்டார். இரு தொகுதிகளிலும் அவர் குறிபிட்டிருந்தசொத்து மதிப்புகள் சரியாக உள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல் வழக்கு தான் தாக்கல் செய்ய முடியும்.ஏற்கெனவே இதே கோரிக்கைகளுடன் தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

அவரது வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், முதல்வர் விஜய், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். ஏதேனும் குறைகள் இருந்தால் தேர்தல் வழக்காக தாக்கல் செய்யலாம் எனவும் மனுதாரர்களுக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.




ஈரோடு மாவட்டம் சிவகிரி தேர்வு நிலை பேரூராட்சியில், 12 வது வார்டு ஜீவா தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் கான்கிரீட் சாலைப் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகிறது. இதன்படி, இப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து, பேரூராட்சி தலைவர் பிரதீபா கோபிநாத் (ஜூன்.16) அன்று நேரில் சென்று ஆய்வு செய்து, ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்வின் போது கவுன்சிலர் தனபால் உடன் இருந்து பணிகளை பார்வையிட்டார்.

# நீட் மறுதேர்வு அச்சத்தால் கோவையில் மாணவி தற்கொலை

கோவை: நீட் மறுதேர்வு அச்சத்தால் கோவையில் மாணவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

கோவை மாநகர எல்லைக்குட்பட்ட கோவைப்புதூரில் உள்ள பாரூக் நகரைச் சேர்ந்தவர் செந்தில்பிரபு. இவர், டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறார். கோவை சி.ஐ.டி.யு. டாஸ்மாக் தொழிற்சங்க பொதுச் செயலாளராகவும் உள்ளார். இவருக்கு மனைவி, இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் அனுகீர்த்தனா (19). இவர், பிளஸ் 2 வகுப்பு முடித்துவிட்டு மருத்துவப் படிப்புக்குச் செல்ல, நீட் தேர்வுக்கு தயாராகி வந்தார். இதற்கு முன்பு இரு முறை நீட் தேர்வு எழுதிய மாணவி அனுகீர்த்தனா அதில் தோல்வியடைந்துள்ளார்.



தொடர்ந்துமூன்றாவது முறையாக நடப்பாண்டும் மாணவி அனுகீர்த்தனா நீட் தேர்வு எழுதியுள்ளார். ஆனால், வினாத்தாள் முன்னரே வெளியான விவகாரத்தால், சமீபத்தில் நடத்தப்பட்ட நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. மீண்டும் அடுத்த சில நாட்களில் நீட் தேர்வு நடத்தப்பட உள்ளது. நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டதால் மாணவி சோகமடைந்தார். நீட் மறுதேர்வு எழுத வேண்டும் என அச்சமடைந்து மனக் குழப்பத்தில் இருந்து வந்ததாக தெரிகிறது. இந்நிலையில், நேற்று (ஜூன் 16) நள்ளிரவுவரை மாணவி அனுகீர்த்தனா நீட் தேர்வுக்காக படித்தார். நள்ளிரவுக்கு பின்னர் உறங்கச் சென்றார்.

இதற்கிடையே, நீட் மறுதேர்வு அச்சத்தால் மனஉளைச்சல் அடைந்த மாணவி அனுகீர்த்தனா நேற்று நள்ளிரவு தூங்க செல்லும் முன்னர் தலைவலிக்கு தேய்க்க பயன்படுத்தப்படும் திரவ வடிவிலான தைலத்தை குடித்துள்ளார். பின்னர், அவரது உடலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதைப் பார்த்த அவரது பெற்றோர் மாணவியிடம் விசாரித்துள்ளனர். அதில், தைலத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றதை தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, குடும்பத்தினர் மாணவி அனுகீர்த்தனாவை மீட்டு ஆவாரம்பாளையத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு மாணவி மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி மாணவி உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக குனியமுத்தூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர். தற்கொலை என்பது எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு அல்ல. தற்கொலை எண்ணம் தோன்றினால் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக 'சினேகா' தற்கொலை தடுப்பு உதவி எண்: 044-24640050, மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104, ஐகால் (iCall Pychosocial) உதவி எண் - 022-25521111 ஆகிய எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

# போலீஸ் விசாரணையில் உயிரிழந்த ஆகாஷ் உடல் 100 நாட்களுக்கு பின்னர் அரசு சார்பில் தகனம்

மதுரை: மானாமதுரையில் போலீஸார் விசாரணையில் உயிரிழந்த ஆகாஷ் உடல், 100 நாட்களுக்குப் பின்னர் அரசு சார்பில் தகனம் செய்யப்பட்டது.





இதற்காக, மதுரை அரசு மருத்துவமனையின் பிணவறையில் இருந்து ஆகாஷ் உடலை எடுத்து வந்தபோது, போலீஸாருக்கும் - ஆகாஷ் உறவினர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீஸுடன் மோதியதற்காக 50 பேர் கைது செய்யப்பட்டனர்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்தவர் ஆகாஷ் டெலிசன் (24). அப்பகுதியைச் சேர்ந்த 2 பேரை வெட்டிய வழக்கில், போலீஸார் அவரை கைது செய்தனர். பின்னர் அவரை போலீஸார் தாக்கியதில் அவரது கால் எலும்பு முறிந்ததாகக் கூறி மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால், ஆகாஷ் கடந்த மார்ச் 8-ம் தேதி உயிரிழந்தார். அவரது உடல் உயர் நீதிமன்ற உத்தரவின்படி உடற்கூராய்வு செய்யப்பட்டது.

இந்த சம்பவத்தில் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில், இதில் தொடர்புடைய போலீஸாரை கைது செய்ய வேண்டும், உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும், அப்போதுதான் ஆகாஷ் உடலை பெற்றுக் கொள்வோம் என அவரது உறவினர்கள் பல கட்டங்களாக போராட்டம் நடத்தினர்.

இதனால், 100 நாட்களாக அவரின் உடலானது மதுரை அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ஆகாஷ் உடலை அரசு சார்பில் அடக்கம் அல்லது தகனம் செய்ய தமிழக அரசுக்கு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

அதன்படி, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் தலைமையில் பலத்த போலீஸார் பாதுகாப்புடன் ஆகாஷின் உடல்தகனம் செய்வதற்காக அரசு மருத்துவமனையில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டது.

அப்போது அங்கிருந்த ஆகாஷின் உறவினர்கள், உடலை வெளியே கொண்டவருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், அவர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து, எதிர்ப்பு தெரிவித்த சுமார் 50 பேரை போலீஸார் கைது செய்தனர். பின்னர், ஆகாஷின் உறவினர்கள் முன்னிலையில், மதுரை தத்தனேரி மின் மயானத்தில் ஆகாஷின் உடல் தகனம் செய்யப்பட்டது.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று (17.06.2026) வருவாய் தீர்வாய அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அருளவாடி, மல்லன்குழி, மாதஹள்ளி, பையண்ணாபுரம், பனகஹள்ளி, கொங்கஹள்ளி, கெட்டவாடி, தொட்டமுதுகரை, எரகனஹள்ளி, திகினாரை, கரளவாடி, தொட்டகாஜனூர், சிக்ககாஜனூர், தாளவாடி, மரூர், இகலூர், நெய்தாளபுரம், தலமலை, ஆசனூர் கிராமங்களுக்கான 1435ம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) ல் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி, தொட்டகெஜலூரில் உள்ள நத்தம் காலியிடங்களில் பட்டா வழங்குவது தொடர்பாக வருவாய் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.06.2026) விசாரணை மேற்கொண்டார்

# புதுச்சேரியில் 42 நாட்களுக்கு பிறகு அமைச்சரவை விரிவாக்கம்: 3 அமைச்சர்கள் பதவியேற்பு

புதுச்சேரி அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டு 3 புதிய அமைச்சர்கள் பழைய ராஜ்நிவாஸில் பதவியேற்றனர். விரைவில் அமைச்சர்களுக்கு இலாக்காக்கள் ஒதுக்கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.



நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், புதுச்சேரியில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்திருக்கிறது. கடந்த மாதம் 13-ம் தேதி முதல்வராக ரங்கசாமி, அமைச்சர்களாக பாஜகவைச் சேர்ந்த நமச்சிவாயம், என்ஆர்.காங்கிரஸை சேர்ந்த மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகியோர் பதவியேற்றனர். இதைத்தொடர்ந்து கடந்த மாதம் 18-ம் தேதி தற்காலிக பேரவைத் தலைவராக அன்பழகன் பதவியேற்றார். 20-ம் தேதி அனைத்து எம்எல்ஏக்களும் சட்டப்பேரவையில் பதவியேற்று கொண்டனர். இதன்பின் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படாமல் இருந்து வந்தது. கடந்த 3-ம் தேதி பாஜகவைச் சேர்ந்த ஜி.என்.எஸ்.ராஜசேகர், என்.ஆர்.காங்கிரஸை சேர்ந்த சிவக்கொழுந்து, ராஜவேலு ஆகியோரை அமைச்சர்களாக பரிந்துரை செய்து அதற்கான கோப்பை துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனிடம் முதல்வர் ரங்கசாமி வழங்கினார். இந்த கோப்பு மத்திய உள்துறை மூலம் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. கடந்த 8-ம் தேதி குடியரசுத் தலைவர் இதற்கு ஒப்புதல் அளித்தார்.

இதையடுத்து பாரதி பூங்கா அருகே உள்ள பழைய துணைநிலை ஆளுநர் மாளிகையில் (ஜூன் 17) காலை 3 அமைச்சர்களின் பதவியேற்பு விழா நடந்தது. தேர்தல் முடிவுகள் வெளியாகி 42 நாட்களுக்கு பிறகு இந்த அமைச்சரவை விரிவாக்கம் நடந்துள்ளது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

தொடர்ந்து சட்டப்பேரவை வந்து அமைச்சர்கள் தங்கள் அறைகளில் பொறுப்பேற்றனர். முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் பங்கேற்றனர்.

ஏற்கெனவே பதவியேற்ற 2 அமைச்சர்களுக்கு இதுவரை இலாகா ஒதுக்கப்படவில்லை. அனைத்து இலாகாக்களையும் முதல்வர் கவனித்து வருகிறார்.

பதவியேற்பு நிகழ்வைத் தொடர்ந்து அமைச்சர்கள் சட்டப்பேரவைக்கு வந்தனர். அவர்களை இருக்கையில் அமர வைத்தபின்பு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், "புதுச்சேரியில் அமைச்சரவை விரிவாக்கம் நடந்தது. அனைத்து அமைச்சர்களும் பொறுப்பேற்று செயல்படவுள்ளனர். நல்ல முறையில் இந்த அமைச்சரவை முழுமையாக செயல்பட்டு மக்களின் நலன் வளர்ச்சிக்கு பாடுபடுவோம். விரைவில் அமைச்சர்களுக்கு இலாகாக்கள் ஒதுக்கப்படும். பேரவைத்தலைவர் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படும். பேரவைத்தலைவர் பதவி பாஜகவுக்கு தரப்படுமா என்பது அதைக்கொடுக்கும்போது தெரியும்," என்றார்.

# Peace deal 'not final', Trump says 'will go back to dropping bombs' if Tehran doesn't 'behave'

*The agreement with Iran is "not final", US President Donald Trump says, describing it as "a Memorandum of Understanding". "No, it's not final. It's a Memorandum of Understanding. And if I don't like it, we'll go back to shooting at them, dropping bombs on their head. If I don't like it, if they don't behave, we'll go right back to dropping bombs right smack in the middle of their head," he said.*



*Tehran has accused Israel of violating the Lebanon ceasefire 84 times since Tehran and Washington signed their memorandum of understanding, warning of a "harsh response" if the attacks continue. The warning came after Israeli forces killed four people in southern Lebanon and as US President Donald Trump asked Israeli Prime Minister Benjamin Netanyahu to be "more responsible" in Lebanon.*

*A third tanker carrying Iranian oil has crossed the US Navy's blockade line in the Gulf of Oman, according to TankerTrackers. Iranian foreign minister Abbas Araghchi said any deal with the US must include sanctions relief, the release of frozen Iranian assets and Israel's withdrawal from Lebanon.*

*Washington and Tehran are set to formally sign an interim agreement on June 19, aimed at ending months of US-Israeli war on Iran.*

*While key details of the arrangement are still coming up, the memorandum of understanding is expected to make way for 60 days of negotiations focused on Iran's nuclear programme and other outstanding issues. The full text of the agreement has not yet been made public. Top points of US-Iran war news from last 24 hours*

*1. Even as US and Iran inch closer to a deal to end months of conflict, Iran foreign minister Abbas Araghchi struck a cautious tone, saying: "We have a history of broken commitments... a history of agreements being torn up. All of this is present in our minds."*

*2. Oil prices extended losses on Tuesday, as markets weighed prospects for resumption of supply through the key Strait of Hormuz against shaky physical market drivers and a lack of details from a preliminary deal to end the Iran war.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.